செ.வெ.எண்: 02/ நவம்பர் நாள்: 02.11.2019

**தருமபுரி மாவட்டம், கடத்தூர், பைசுஹள்ளி மற்றும் பாலக்கோடு ஆகிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 442 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.54.25 இலட்சம் மதிப்பில் விலையில்லா மடிகணினிகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் வழங்கினார்.**

தருமபுரி மாவட்டம், கடத்தூர், பைசுஹள்ளி மற்றும் பாலக்கோடு ஆகிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 442 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.54.25 இலட்சம் மதிப்பில் விலையில்லா மடிகணினிகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் வழங்கினார். இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் பேசியதாவது :-

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசின் சார்பில் தருமபுரி மாவட்டம், கடத்தூர், பைசுஹள்ளி மற்றும் பாலக்கோடு ஆகிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 442 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.54.25 இலட்சம் மதிப்பில் விலையில்லா மடிகணினிகளை வழங்கியதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தருமபுரி மாவட்டத்தில் கிராமப்புறங்களில் உள்ள ஏழை, எளிய மாணவர்கள், முழுமையாக பள்ளிக் கல்வியை பெற வேண்டும் என்ற நோக்கில் தமிழக அரசு பள்ளிக்கல்வித்துறையில் பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

தமிழக அரசு மாணவர்களின் நலன் கருதி புத்தகப்பைகள், காலணிகள், நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், வடிவியல் பெட்டிகள், விலையில்லா மடிக்கணிகள் உள்ளிட்ட 14 வகையான பொருட்கள் வழங்க பள்ளிக்கல்வித்துறைக்கு நிதிநிலை அறிக்கையில் ரூ.28,757 கோடியே 62 இலட்சம் ஒதுக்கியுள்ளது. மேலும் உயர்கல்வித்துறைக்கு நடப்பு நிதி ஆண்டிற்கு ரூ.4,584 கோடியே 21 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

இந்திய அளவில் உயர்கல்வி பயில்வோர் 25.8 சதவீதம் பேர் உள்ளனர். தமிழகத்தில் இந்த சதவீதம் 49 சதவீதமாக உள்ளது. வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத சிறப்புத்திட்டங்களை பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வித்துறையில் தமிழக அரசு செயல்படுத்திவருவதால் இந்த சதவீதம் உயர்ந்துள்ளது. கடந்த கல்வியாண்டில் தருமபுரி மாவட்டத்தில் பனிரண்டாம் வகுப்பு முடித்துவிட்டு உயர்கல்வி பெறுவோரின் சதவீதம் 98.41 சதவீதமாக உள்ளது. மேலும் அரசு பொறியியல் கல்லூரி, சட்டக்கல்லூரி, பாலிடெக்னிக், ஐடிஐ, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என அனைத்து கல்லூரியும் உருவாக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்திலுள்ள கடத்தூர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் படிக்கும் 141 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.17.30 இலட்சம் மதிப்பில் விலையில்லா மடிக்கணினியும், பைசுஹள்ளி பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு

ரூ.14.73 இலட்சம் மதிப்பில் 120 விலையில்லா மடிக்கணினியும், பாலக்கோடு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் படிக்கும் 181 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.22.21 இலட்சம் மதிப்பில் விலையில்லா மடிக்கணினி என மொத்தம் ரூ. 54.25 இலட்சம் மதிப்பில் 442 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிகணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை பலவகை தொழில்நுட்ப கல்லூரிக்கு ரூ. 16.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மோகனூர் மற்றும் சேலம் சர்க்கரை ஆலை பலவகை தொழில்நுட்ப கல்லூரிக்கு ரூ.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களிலுள்ள ஏழை எளிய குடும்பத்தை சார்ந்த மாணவ,மாணவியர்கள் உயர்க்கல்வி பயில வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் தமிழக அரசு வழங்கும் திட்டங்களை மாணவ, மாணவியர்கள் முழுமையாக பயன்படுத்தி எதிர்காலத்தை சிறப்பாக அமைத்துகொள்ள வேண்டும் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.எ.கோவிந்தசாமி, அரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வே.சம்பத்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எச்.ரஹமத்துல்லா கான், அரூர் சார் ஆட்சியர் திரு.மு.பிரதாப்,இஆப., மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.எஸ்.ஆர்.வெற்றிவேல், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர்கள் திரு.பொன்னுவேல், திரு.சிவபிரகாசம், பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் திரு.தொ.மு.நாகராஜன், அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் திரு.விஸ்வநாதன், முன்னாள் பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் திரு.கே.வி.அரங்கநாதன், முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் திரு.கோபால், வட்டாட்சியர்கள் திரு.இளஞ்செழியன், திரு.வெங்கடேஸ்வரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.வெங்கடேசன், திரு.விமலன் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,தருமபுரி.**